**செய்தி வெளியீடு எண் : 1208** **நாள் : 14.08.2024**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களின் தலைமையில் இன்று (14.08.2024) தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் முன்மொழியப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய அருங்காட்சியகங்கள் குறிப்பாக பொருநை அருங்காட்சியகம், கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம், கங்கைகொண்டசோழபுரம், கொடுமணல், இராமநாதபுரம் அருங்காட்சியகம், குற்றாலம், பூண்டி, தருமபுரி அகழ்வைப்பகங்கள் மற்றும் இதர திட்டப் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டன. இவ்வாய்வின் போது அருங்காட்சியகங்கள் சிறப்பாக அமைப்பது தொடர்பாகவும் குறிப்பாக தமிழ்நாட்டின் பொருநை ஆற்றங்கரை நாகரிகத்தின் சிறப்பினை சீருடன் வெளிப்படுத்தும் வகையில் பொருநை அருங்காட்சியகத்தினை அமைக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்த உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்தில் அரசு முதன்மை செயலாளர், நிதித் துறை மற்றும் ஆணையர், தொல்லியல் துறை (மு.கூ.பொ), திரு.த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., அரசு முதன்மை செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, டாக்டர் சந்தர மோகன் B, இ.ஆ.ப., இயக்குநர், அருங்காட்சியகங்கள் துறை திருமதி கவிதா ராமு, இ.ஆ.ப., மற்றும் பிற உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu